**மன்னார் மாவட்டத்தின் 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் - 2022**

---

## 1 கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மன்னார் மாவட்டத்தின் கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் பதின்மூன்று இன் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டத்தின் 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பளிப்புள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 12 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் கமநல சேவைகள் நிலையத்திற்கு சொந்தமான காணிகள்,கட்டடங்கள் மற்றும் ஆதனம் பொறி இயந்திரங்களின் பெறுமதிகள் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்காமையினால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிமை மாற்றம் செய்யப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படும். | பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 02 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் இரண்டு பொறுப்புக்கள் ரூபா 180,000 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இவ் வருடம் கணக்கறிக்கையில் சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 02 கமநல சேவை நிறைவேற்றுக்குழுக்களின் பதிவழிப்பு செய்ய வேண்டிய மற்றும் நன்கொடையாக பெறப்பட்ட சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 7,923,384 மீளாய்வாண்டில் திரண்ட நிதியத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக பதிவழிப்பு செய்யப்படாததுடன் சீர்செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பாலம்பிட்டி கமநல சேவை நிறைவேற்றுக்குழுவின் யூரியா விற்பனை மூலம் பெறப்பட்ட தொகை ரூபா 19,681,498 உதவி ஆணையாளருக்கு | கணக்கு ஏடுகளில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை | சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்பட்டு அத்தொகை நிதி செயலாற்றுகைக் கூற்றில் செலவினமாக வெளிப்படுத்தப்பட்டமையினால் மீளாய்வாண்டிற்கான வரவிலும் கூடிய செலவினம் குறித்த தொகையினால் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | முருங்கள் கமநல சேவை நிறைக்குழுவின் கடந்த ஆண்டுகளில் நிதி நிலைமைக் கூற்றில் உரிமையாண்மையின் கீழ் வெளிப்படுத்தி வந்துள்ள ஒதுக்கம் ரூபா 190,167 மீளாய்வாண்டில் எவ்விதமான பதிவுகளுமின்றி குறித்த தொகை நிதிக்கூற்றுக்களில் இருந்து நீக்கப்பட்டுள்ளமையினால் உரிமையாண்மையின் பெறுமதி குறித்த தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இதனை கணக்கறிக்கையில் சீர் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலையங்களின் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,904,598 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | பெற வேண்டிய சில அட்டவணைகள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2000 ஆம் ஆண்டு 46 ம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| **(i)** பிரிவு 44(1) | கமக்கார அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் ஆண்டுகணக்குகள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் பரிசீலனை செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், | கணக்குகள் இனிவரும் காலங்களில் உரிய முறையில் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 13 கமநல சேவை நிறைக்குழுக்களின் கணக்குகள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை | | |
| (ii) | பிரிவு 45(1) | கமத்தொழில் காணிகளின் பதிவேடுகள் கமநல சேவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 13 கமநல சேவை நிறைக்குழுக்களின் பதிவேடுகள் கமநல சேவை ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரிவு 45 (1) இன் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியிடப்பட்ட 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி -II இன் பந்தி 9.1 | காசு, காசோலை மற்றும் களஞ்சியங்கள் தொடர்புடைய உத்தியோத்தர்களிடமிருந்து பிணையங்கள் பெற்றுக்கொள்வதற்கு கடந்த 03 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர் விபரம் ஆணையாளர் நாயகத்தின் மேலதிக நடவடி க்கைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உத்தியோத்தர் களிடம் பிணைகள் பெறப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 13 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 10,918,767 தொகைக்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 104,952 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளில் ரூபா 10,813,815 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஜப்பான் யென் உதவி செயற்திட்டத்தின் கீழ் 4 கமக்காரர்களுக்கு தவணை கொடுப்பனவு முறை அடிப்படையில் வழங்கப்பட்ட இரு சில்லு உழவு இயந்திர வருமதி நிலுவை ரூபா 845,000 எட்டு வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்டதுடன், இலுப்பைக்கடவை கமநல சேவை நிறைவேற்றுக் குழுவினால் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த வருமதிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை களை விரைவுபடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டுச் செயற்றிறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக அறவிட வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 4,900,378 பெறுமதியான வருமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமதிகள் தொடர்பில் உரிய விபரங்கள் காணப்படவில்லை. | வருமதிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் நீண்டகாலமாக சென்மதியாளர்களுக்கு செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய கூட்டு மொத்தம் ரூபா 5,119,580 இனை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருமதிகள் தொடர்பில் உரிய விபரங்கள் காணப்படவில்லை. | குறித்த சென்மதிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது பயன்படுத்தப்படாத சொத்துக்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாந்தை கமநல சேவை நிலையத்தில் உள்ள மூன்று வகையான 15 எண்ணிக்கையான சொத்துக்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தாமல் காணப்படுவதுடன் அதனை அகற்றுவதற்கோ மீளப்பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்வதற்கும் அகற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 05 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 36 எண்ணிக்கையான உழவு இயந்திரங்கள் மற்றும் 11 வகையான 88 எண்ணிக்கையான சொத்துக்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாமல் காணப்படுவதுடன் அதனை அகற்றுவதற்கோ, மீளப்பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்தப்படாத நிலையிலுள்ள சொத்துக்களை பதிவழிப்பு செய்யும் பொருட்டு மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 13 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் ஆகியோர்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முறையான மனிதவள திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | இவ்வருட கணக்கறிக்கையுடன் பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 வாகன முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கமநல சேவை நிலையத்தில் காணப்படும் அனைத்து உழவு இயந்திரங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் நாளதுரை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கமநல சேவை நிலையங்களில் காணப்படும் அனைத்து உழவு இயந்திரங்களின் உரிமை உரித்தாக்குவதற்கு மற்றும் நாளாந்த ஓட்ட அட்டவணை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமை உரித்தாக்குவதற்கு, சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணைகள் நாளதுவரை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுத் திட்டம் இனிவரும் காலங்களில் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கைகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக் கமைய தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின் பந்தி 09 இன் பிரகாரம் 01 தொடக்கம் 16 வரையான வருமானங்கள் சரிவர இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் சுற்றறிக்கைக்கு அமைவாக மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களினை (2030 ஆம் ஆண்டில்) அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்தப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குவதற்கான வருடாந்தம் செயற்பட வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நெருங்குதல் அதன் முன்னேற்றத்தை அளவீடு செயற்வதற்கான சுட்டிகளை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |